


**We Shine Academy**™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 28.10.2018


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- விருதுகள்











# இந்திய நிகழ்வுகள்

- சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு சேவை செய்வதில், குறிப்பாக தொழில்நுட்பத்தின் பயன்களை அதிகரிப்பதில் மகத்தான ஒத்துழைப்பை வழங்குவதற்காக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், **"பொது சேவையில் நான்"** என்ற மையப்பொருளுடன் செயல்படவிருக்கும் **"மெயின் நஹின் ஹம்" (Main Nahin Hum) (நான் அல்ல நாம்)** என்ற இணையப்பக்கம் (Portal) மற்றும் செயலியை புது தில்லியில் தொடங்கியுள்ளார்.

- இந்தியாவின் முதல் **என்ஜீனில்லாத இரயில் வண்டியான "Train 18"** அக்டோபர் 29ம் தேதியன்று பரிசோதனைகளுக்காக சோதிக்கப்பட உள்ளது. இது 30 வருடமாக உள்ள சதாப்தி எக்ஸ்பிரஸ் வண்டிக்கு மாற்றாக, **"இந்தியாவில் தயாரிப்போம்"** என்ற திட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் **(ICF – Integral Coach Factory)** தயாரிக்கப்பட்டது.
  - **Train – 18** ஆனது மெட்ரோ ரயில் வண்டிகளில் உள்ளதைப் போல தன்னிச்சையாக உந்தப்படும் வசதியுடையது ஆகும்.

# உலக நிகழ்வுகள்

- கேமரூனின் ஜனாதிபதி **"பால் பியா"** ஏழாவது முறையாக மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து 30 வருட ஆட்சியை நீடித்துக் கொண்டுள்ளார்.
  - எதிரணி வேட்பாளரான மௌரிஸ் காம்தோவின் 14.2 சதவிகிதத்தை விட அதிகமாக 71.3 சதவிகித வாக்குகளைப் பெற்று "பால் பியா" வெற்றி பெற்றுள்ளார்.

- **2018ம் ஆண்டின்** நீர், ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் **(WETEX)** கண்காட்சி **(WETEX – Water, Energy, Technology and Environment Exhibition)** துபாயில் உள்ள துபாய் சர்வதேச கண்காட்சி மையத்தில் தொடங்கியுள்ளது.

We Shine Academy TM

## விளையாட்டு நிகழ்வுகள்

- புடாபெஸ்டில் நடைபெற்றும் வரும் உலக மல்யுத்த சாம்பியன் போட்டியின் 57 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **"பூஜா தண்டா"** ஐரோப்பிய முன்னாள் சாம்பியனான **கிரேஸ் ஜேக்கப் புல்லனை** வென்று வெண்கலம் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- தனியார் உயிர்க் காப்பீட்டு நிறுவனமான **பிஎன்பி மெட்லைப் (PNB Metlife)** என்ற நிறுவனமானது தனது பங்குதாரர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு **'குஷி' (Kushi)** என்ற செயற்கை நுண்ணறிவால் செயல்படுத்தப்படும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

## நியமனங்கள்

- நாட்டில் நடைபெறும் கள்ளத்தனமான பணப்பரிமாற்றம் மற்றும் கருப்புப்பணம், வங்கி ஊழல்கள் தொடர்பான புகார்கள் மற்றும் வழக்குகளை விசாரிக்கும் பொருளாதார அமலாக்கத் துறையின் இயக்குனராக **"சஞ்சய் மிஷ்ரா"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்த அமைப்பின் இயக்குனராக இருந்த **"கர்னல் சிங்"** பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி, சஞ்சய் மிஷ்ரா இடைக்கால இயக்குனராக மத்திய அரசு நியமித்துள்ளது.

## விருதுகள்

- **கேரள** மாநில கல்வித் துறையில் நவீன தொழில் நுட்பங்களை அமல்படுத்தியதற்காக, கேரள அதிகாரியான **"அன்வர் சதாத்"** என்பவருக்கு **AECT** சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 40 ஆயிரம் வகுப்பறைகளை சர்வதேச அளவுக்கு நிகராக நவீன தொழில்நுட்பங்கள் அடங்கிய **"ஸ்மார்ட்"** வகுப்பறைகளாக மாற்றியுள்ளார்.

- இந்தியா சார்பில் AECT விருது **(Association for Educational Communication and Technology)** பெற்ற முதல் நபர் என்ற பெருமையை அன்வர் சதாத் பெற்றுள்ளார்.

- சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக தன்னை அர்ப்பணித்தல், இந்திய மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சியில் பங்கு ஆகியவற்றை அங்கீகரிக்கும் விதமாக, **சியோல் அமைதி விருதுக்கான** தேர்வுக் குழுவானது 2018ம் ஆண்டின் சியோல் அமைதி விருதை **(SEOL Peace Award)** இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்க உள்ளது.
    - உலகப் புகழ்பெற்ற பிரபலங்களான **ஜெர்மனியின் ஏஞ்சலா மெர்கல்,** ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் **கோபி அணான்** உள்ளிட்டோருக்குப் பிறகு இவ்விருதைப் பெறும் 14வது நபர் மோடி ஆவார்